33
19/6/24

செயற்பொறியாளர், நீவது., நீர்ப்பிரிகை மேலாண்மை வாரியக் கோட்டம், பொள்ளாச்சி
அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை - பொறி.D.திவாகர். M.E.,M.I.S.H.,
செயற்பொறியாளர்,நீவது.,(கூ.பொ)

**செயல்முறை ஆணை எண்.நிஉ_1 / கோ. 2 / 2024, நாள். 29.05.2024.**

பொருள்: பணியமைப்பு - நீவது. - த.நா.அ.ப. தொகுதி - திருமதி.தி.திவ்யா, த/பெ. காலஞ்சென்ற திரு.க.திருமூர்த்தி, ஓட்டுநர் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் - பணிவரன்முறை ஆணை வழங்குதல் - குறித்து.

பார்வை:
1. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீவது., சென்னை அவர்களின் செ.மு.ஆ.எண்.எஸ்3(2) / 43865 / 2022, நாள்.15.12.2022.
2. தலைமைப் பொறியாளர், நீவது., வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை அவர்களின் செ.மு.ஆ.எண்.இ1 / 5120 / 2022, நாள்.22.12.2022.
3. கண்காணிப்புப் பொறியாளர் / இயக்குநர், நீவது., நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக் கழகம், பூண்டி அவர்களின் செ.மு.ஆ.எண்.இ1 / 1428 / 2022, நாள்.29.12.2022.
4. இவ்வலுவலக செ.மு.ஆ.எண்.நிஉ 2 / கோ.3 / 2023, நாள்.12.01.2023.
5. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள்.08.03.2023.
6. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீவது., தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடித எண். 1321 / பி1 / 2024-1, நாள்.02.04.2024.
7. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீவது., சென்னை அவர்களின் கடித எண்.எஸ்3(2) / 21951 / 2024, நாள்.29.04.2024.

*****

உதவி செயற்பொறியாளர், நீவது., ஆழியார் வடிநில உபகோட்டம், பல்லடம் அலுவலகத்தில் பணிபுரிந்த திரு.க.திருமூர்த்தி, ஓட்டுநர் அவர்கள் 20.05.2021 அன்று காலமானார். அதனைத் தொடர்ந்து காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.க.திருமூர்த்தி, ஓட்டுநர் அவர்களின் மகள் திருமதி.தி.திவ்யா அவர்களுக்கு பார்வை 1 முதல் 4 முடிய உள்ள செயல்முறை ஆணைகளின்படி இக்கோட்ட அலுவலகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள உதவி செயற்பொறியாளர், நீவது., நீர்ப்பிரிகை மேலாண்மை வாரிய உபகோட்டம், திருநெல்வேலி அலுவலகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

த.பி.பா.

அதனைத் தொடர்ந்து திருமதி.திவ்யா, கருணை அடிப்படையில் இக்கோட்டத்தின் கீழியங்கும் உதவி செயற்பொறியாளர், நீவது., நீர்ப்பிரிகை மேலாண்மை வாரிய உபகோட்டம். திருநெல்வேலி அலுவலகத்தில் 13.01.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 5-ல் காணும் அரசாணையில் (Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds) Rules, 2023) வெளியிடப்பட்டுள்ள கருணை அடிப்படையில் பணிநியமன விதிகளின்படி, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணிவரன்முறை குறித்த கருத்துருவில் விதித்தளர்வு தேவைப்படாத இனங்களில் பணிநியமன அலுவலர் நிலையில், பணியாளர்களின் பணியினை விதி 16-ன்படி, வரையறைக்குட்பட்டு நியமன அலுவலரே வரன்முறை செய்து கொள்ளுமாறும், விதி 17-ன்படி [illegible] விதித்தளர்வு தேவைப்படும் பணியாளர்களின் பணிவரன்முறை தொடர்பான கருத்துருக்களை மட்டும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

எனவே பார்வை 6 மற்றும் 7-ல் காணும் அரசுக் கடிதம் மற்றும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீவது., சென்னை அவர்களின் கடிதங்களில் தெரிவித்துள்ளபடி திருமதி.தி.திவ்யா, இளநிலை உதவியாளர் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 13.01.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட திருமதி.தி.திவ்யா, இளநிலை உதவியாளர் அவர்கள் அப்பதவியில் தொடர்ந்து மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டுகளில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

மேலும் தனியர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

செயற்பொறியாளர் (கூ.பொ), நீவது.,
நீர்ப்பிரிகை மேலாண்மை வாரியக் கோட்டம்,
பொள்ளாச்சி

பெறுநர்.

திருமதி.தி.திவ்யா, இளநிலை உதவியாளர்,
உதவி செயற்பொறியாளர் அலுவலகம், நீவது.,
நீர்ப்பிரிகை மேலாண்மை வாரிய உபகோட்டம்,
திருநெல்வேலி.

நகல்: பணிபதிவேட்டில் பதிவு மேற்கொள்ள.